# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | மதுரை | காலம் : | 30/07/2022 | முதல் | 03/08/2022 |
| அறிக்கை எண் : | 060/ 2022 | வெளியீட்டு நாள் : | 29/07/2022 | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34° - 36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° - 24° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (26.07.2022 முதல் 28.07.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 03-08-2022- 08.30 வரை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 26/07 | 27/07 | 28/07 | | தேதி | நாள்-1 30/07 | நாள்-2 31/07 | நாள்-3 01/08 | நாள்-4 02/08 | நாள்-5 03/08 |
| 6.7 | 23.4 | 27.3 | | மழை (மி.மீ) | 4 | 4 | 8 | 12 | 25 |
| 36 | 34 | 34 | | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 35 | 35 | 34 | 34 | 33 |
| 23 | 24 | 23 | | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 25 | 24 | 24 | 23 |
| 7 | 5 | 4 | | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 7 | 7 | 7 |
| 86 | 80 | 86 | | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 85 | 85 | 85 |
| 67 | 58 | 51 | | | 60 | 60 | 70 | 70 | 70 |
| 11 | 5 | 5 | | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 8 | 8 | 6 |
| வட மேற்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | | **காற்றின் திசை** | தென்மேமேற்கு | மேற்கு | வட மேற்கு | வட மேற்கு | தென்மேமேற்கு |

**குறுஞ்செய்தி** :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 30, 31 தேதிகளில் லேசான மழையும், ஆகஸ்ட் 1, 2, 3 ம் தேதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 33° - 35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23°-25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், தென்மேற்கு, மேற்கு மற்றும் வடமேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு

**(29 ஜூலை- 04 ஆகஸ்ட் 2022) :**

மழைப்பொழிவு :

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் பொதுவாக இயல்பை விட சிறிதளவு கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு.

அதிகபட்ச வெப்பநிலை :

அடுத்த நாட்களுக்கு மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும்.26°செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

குறைந்தபட்ச வெப்பநிலை :

குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில், மாவட்டத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பொதுவாக
இயல்பை ஒட்டியே ஒட்டியே காணப்படும்.20° செல்சியஸ் முதல் 26° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

இடி மின்னல் எச்சரிக்கை:

வரும் 30.07.2022 முதல் 03.08.2022 தேதிகளில் தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. வயல்களில் ஆடுகளை கிடை அமர்த்துதல் மற்றும் மேய்ச்சலின் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இந்த காலகட்டத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்** : **கொய்யா,** முருங்கை, கால்நடை.

**கொய்யா:**

- கொய்யா பழப்பயிரில் பழஈ கட்டுப்படுத்த ஒரு எக்கருக்கு 12 இனக்கவர்ச்சிப் பொறிகள் வைக்கவும்.

முருங்கை:

- முருங்கையில் நல்ல விளைச்சல் பெற செடி ஒன்றுக்கு 45 கிராம் தழைச்சத்து, 16 கிராம் மணிச்சத்து, 30 கிராம் சாம்பல் சத்து ஆகியவற்றை விதைத்த மூன்றாவது மாதத்தில் இட்டு நீர் பாய்ச்ச வேண்டும்.

கால்நடை:

- வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளை தாக்கும் வெளிப்புற ஒட்டுண்ணிகளை நீக்க 2 மில்லி பூட்டாக்ஸ் மருந்தினை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தங்களது ஆடுகளின் வெளிப்புறங்களில் பூசவேண்டும். (மேல்பூச்சிற்க்கு மட்டுமே).